## உயர்பிரிவு (01-09-2000 – 31-08-2002)

**அதிகாரம் - 39** **இறைமாட்சி**

1. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
   கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

**பொருள் :** செவிக்கு இனிக்காத இடிப்புரைகளைப் பொறுத்துக் கொள்ளும் பண்புடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

**அதிகாரம் - 44** **குற்றம் கடிதல்**

2. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
   நன்றி பயவா வினை

**பொருள் :** அறிவு ஆற்றல்களிலும் இடம் பொருள் ஏவல்களிலும் தான் மிக உயர்ந்த போதும், தன்னை மெச்சிச் செருக்குக் கொள்ளாது இருக்க வேண்டும்.

**அதிகாரம் - 47** **தெரிந்து செயல்வகை**

3. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
   போற்றினும் பொத்துப் படும்

**பொருள் :** தக்க வழியில் செய்யப்படாத முயற்சி, பின்பு யாரும் துணையாக நின்று காப்பினும் கெட்டுப் போகும்.

**அதிகாரம் - 51** **தெரிந்து தெளிதல்**

4. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
   தீரா இடும்பை தரும்

**பொருள் :** தன்னோடு தொடர்பற்ற ஒருவனை ஒருவழியாலும் ஆராயாமல் தேர்ந்தெடுத்தவருக்கு, அத்தேர்வு அவன் வழியினர்க்கும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

**அதிகாரம் - 56** **கொடுங்கோன்மை**

5. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
   நாள்தொறும் நாடு கெடும்

**பொருள் :** தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து, அதற்கேற்ப முறை செய்யாத அரசன், நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நாட்டை இழப்பான்.

தொடர்ச்சி ..........

**அதிகாரம் - 71** **குறிப்பு அறிதல்**

6. ஐயம் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

**பொருள் :** ஒருவனது மனத்தில் உள்ளதை ஐயப்படாது அறியவல்லவனை மதிநுட்பத்தால் தெய்வம் போன்றவன் எனக் கருதி, அதற்கேற்ப மதித்துப் போற்ற வேண்டும்.

**அதிகாரம் - 79** **நட்பு**

7. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

**பொருள்:** ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்வதற்கு ஓரிடத்தில் கூடுவதும், பலமுறை கண்டுபேசி உறவாடுவதும் வேண்டியதில்லை. இருவருக்கும் ஒத்த மனப்பான்மையே நண்பராவதற்குரிய உரிமையைத் தரும்.

**அதிகாரம் - 93** **கள்ளுண்ணாமை**

8. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார்

**பொருள்:** கள்ளின் மேல் பெருவிருப்பங் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார். அதுமட்டுமன்றித் தாம் பெற்றிருந்த நற்பெயரையும் இழப்பர்.

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்